விவசாயத் திணைக்கள தொழில்நுட்ப சுற்றறிக்கை 01/2018

எனது இல. நிர் / 1/2/5/4
விவசாயத் திணைக்களம்,
பேராதனை.
2018.12.03

விவசாயத் திணைக்களத்தின் சகல மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள்,
சகல பணிப்பாளர்கள் / பிரதான பொறியியலாளர்
பிரதான கணக்காளர் / பிரதான உள்ளக கணக்காய்வாளர் / பீடைகொல்லிகள் பதிவாளர் /
பிரதான விவசாய விசேடத்துனர்கள் / பிரதான விவசாய விஞ்ஞானிகள் /
மேலதிகப் பணிப்பாளர்கள்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (மாகாண இடை கடமைப் பிரதேசம் - அம்பாறை / மொனராகலை / பொலன்னறுவை/ அனுராதபுரம் / ஹசலக / ஹம்பாந்தோட்டை)
உதவி பணிப்பாளர்கள்,
நிலையப் பொறுப்பதிகாரிகள்,
அலகு மற்றும் கிளைப் பொறுப்பாளர்கள்

## படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆலோசனைகள்

படைப்புழு எனப்படும் பீடையின் செயற்பாடு காரணமாக தற்சமயம் விவசாயத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை குறைத்துக் கொள்வதற்காக முழு விவசாயச் சமூகத்தின் மூலமாகவும் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டலினை உள்ளடக்கியதாக இத்திணைக்களத்தினால் தொழில்நுட்ப சுற்றறிக்கையானது வெளியிடப்படுகின்றது.

1. படைப்புழுவானது (*Spodoptera frugiperda*) இலங்கைக்கு அந்நிய ஆக்கிரமிப்பு பீடை ஒன்றாகையால் உடனடியாக அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக சகல பீடைக் கட்டுப்பாட்டு முறைகளையும் பயன்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல் வேண்டும். மேலும் இதன் பொருட்டு மாகாண / மாகாண இடை / மகாவலி கடமைப் பிரதேச விரிவாக்கல் உத்தியோகத்தர் குழாமினை உடனடியாக வினைத்திறனாக வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

2. வெளிக்கள உத்தியோகத்தர் குழாமினை இரண்டு குழுக்களாக பிரித்து ஒரு குழுவினை பொருத்தமான சிரேஷ்ட வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் படைப்புழுவின் தாக்கம் தொடர்பான அறிவூட்டலினை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தவும். அடுத்த குழுவினை அதேபோன்று மேலும் ஒரு சிரேஷ்ட வெளிக்கள உத்தியோகத்தர் கண்காணிப்பின் கீழ் பீடையினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தவும்.

3. பீடைகளை கட்டுப்படுத்த பொருத்தமான பீடைநாசினிகளின் பட்டியல் ஒன்று தொழில்நுட்ப சிபாரிசின் அடிப்படையில் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பீடைநாசினிகளை இலங்கையில் விநியோகிக்கும் நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலையும் அத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. இப்பீடைநாசினிகள் பட்டியலிலுள்ள பீடைநாசினிகள் மூன்று தொகுதிகளை சேர்ந்தது. ஒரு பீடை நாசினியை உபயோகித்த வயல் ஒன்றிற்கு இப்பட்டியலிலுள்ள வேறுமொரு பீடைநாசினியை இடுவதாயின் ஏற்கனவே இட்ட பீடைநாசினி உள்ளடங்கும் செயற்பாட்டு கூட்டம் அல்லாத வேறொரு செயற்பாட்டு கூட்டத்தை சேர்ந்த பீடைநாசினி ஒன்றினை இடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும்.

4. பீடைகளின் தாக்கம் அவதானிக்கப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே விரிவாக்கற் பயிற்சி பிரிவின் மூலம் இரசாயன கட்டுப்பாடு தொடர்பான செயற்றிட்ட அறிக்கை ஒன்றை தயாரித்து அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதால் தற்சமயம் மாகாண இடை கடமைப் பிரதேசங்களுக்கும் மாகாணங்களுக்குமான நிதி இச்செயற்றிட்டத்தின் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ளது.

5. இப்பீடையினை கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலணியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் நேரடியாக தொடர்புபடுவதுடன் உங்களது பூரண பங்களிப்பினையும் வழங்கல் வேண்டும்.

6. இக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அவசியப்படும் பீடைநாசினிகளை பிராந்திய கேள்விமனு சபைகள் மூலம் கொள்வனவு செய்தல் வேண்டும். பீடையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வயல்களுக்கு அவசியப்படும் பீடை நாசினியின் அரைவாசியினை இலவசமாக பெற்றுக் கொடுத்து கட்டுப்பாட்டு நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும். மீதியளவு பீடைநாசினி இடுவதற்கு விவசாயியை ஊக்குவித்தல் மிகவும் முக்கியமானது என்பதனை இவ்விடத்தில் வலியுறுத்தி குறிப்பிடுகின்றேன்.

7. மாகாண இடை கடமைப் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது விரிவாக்கற் பயிற்சி நிலையத்தில் உள்ளது. பொருத்தமான கேள்விமனு கோரல் நடைமுறையினை பின்பற்றி கொள்வனவு செய்யப்படும் பீடைநாசினிகள் உரிய சிபாரிசுடன், விவசாயிக்கு குறித்த பீடைநாசினியானது பெற்றுக் கொடுக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் பட்டியலுடன் முன்வைக்கப்பட்டு குறித்த பீடைநாசினிகளை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8. மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் அல்லது மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் முறையான கேள்வி மனு கோரல் முறையினை பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்ட பீடைநாசினிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தற்சமயம் உணவு உற்பத்தி தேசிய செயற்றிட்டத்தின் செலவுகளை மீள பெற்றுக் கொள்ளும் முறையை போன்று உரிய சிபாரிசுடன், விவசாயிக்கு குறித்த பீடைநாசினியினை பெற்றுக் கொடுத்தமையினை உறுதிப்படுத்தும் பட்டியலுடன் விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்ற அடைவு கண்காணிப்பு பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு கொடுப்பனவினை மேற்கொள்ளல் வேண்டும்.

9. ஒரு பீடைநாசினியினை இட்டபின்பும் குறித்த வயலில் பீடையின் தாக்கம் தொடர்ந்தும் காணப்படுமெனில் அவ்வயலுக்கு / அவ்விவசாயிக்கு வேறொரு செயற்பாட்டு கூட்ட பீடைநாசினி ஒன்றினை இடுவதற்கு பெற்றுக் கொடுக்க முடியும். இதன்போதும் பாதியளவு பீடைநாசினியானது விவசாயினால் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

10. படைப்புழுவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பரப்பளவு, தாக்கத்தின் தீவிரத்தன்மை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற அடைவு என்பவற்றை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கு மாகாண, மாகாண இடைக் கடமைப் பிரதேச, மகாவலி கடமைப் பிரதேசங்களுக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை பெயரிட்டு அவரின் பெயர், பதவி, தொலைபேசி இல. (கையடக்க மற்றும் நிலையான) மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை உடனடியாக எனக்கு அறியப்படுத்தல் வேண்டும். அத்துடன் இவ்விதம் பெயரிடும் உத்தியோகத்தருக்கு குறித்த பொறுப்பானது எழுத்துமூலம் வழங்கப்படல் வேண்டும்.

11. 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவர தடுப்புக் காப்பு சட்டத்தின் கீழ் இப்பீடையானது பரவிச் செல்வதை குறைத்துக் கொள்வதற்காக பீடையினால் பாதிக்கப்பட்ட சோளம் உள்ளடங்களாக தாவரப் பகுதிகளை குறித்த பிரதேசத்திலிருந்து வேறொரு பிரதேசத்திற்கு போக்குவரத்து செய்யும் போது பீடைகளை அழித்து, பாதுகாப்பான முறையில் போக்குவரத்து செய்யப்படல் வேண்டும்.

12. படைப்புழுவின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தி, பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பினை குறைத்து கொள்வதற்காக, மேலே தரப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் உங்களது உச்ச பங்களிப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பமிட்டது : கலாநிதி டப்.எம்.டப் வீரகோன்
விவசாயப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள் :**

1. செயலாளர் (விவசாய அமைச்சு) - தயவு செய்து அறிந்து கொள்ளும் பொருட்டும் மேற்படி விடயம் தொடர்பாக மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினை அறியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும்
2. பிரதான செயலாளர் (வடமேல் / வடமத்திய / ஊவா / கிழக்கு மாகாணம்)
3. மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி / விவசாய தொழில்நுட்பம்)
4. செயலாளர், மாகாண விவசாயத் திணைக்களம் (வடமேல் / வடமத்திய / ஊவா / கிழக்கு மாகாணம்)
5. மாகாணப் பணிப்பாளர் (விவசாயத் திணைக்களம்) (வடமேல் / வடமத்திய / ஊவா / கிழக்கு மாகாணம்)

(2–5) தயவுசெய்து அறிந்து கொள்ளும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும்